**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 17 /2025 வா.சா.2**

2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 03–ம் நாள் செவ்வாய் கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: பாண்டியம்மாள் | தந்தை பெயர்: அழகு |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**<u>03.06.2026.</u>முதல் விசாரணை:**

1. நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் என்னுடையது தான். நான் சொல்ல சொல்ல எனது தரப்பு வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. தாவாச் சொத்தானது ஆதியில் எனது அப்பா அழகுக்கு பாத்தியம். தற்போது அவருடன் உயிருடன் இல்லை. அழகுக்கு வாரிசுகள் பெரியய்யா, ராசு, சின்னையா , பழனியம்மாள் ஆவார்கள். நான் அழகுவின் வாரிசு ஆவேன். எனது தாயார் தற்போது உயிருடன் உள்ளார். அவர் பெயர் நாச்சம்மாள் ஆகும். தாவாச் சொத்திற்கு தற்போது இராசு பெயரில் மின்இணைப்பு உள்ளது. எங்களிடம் கையொப்பம் பெற்று இராசு மின் இணைப்பு பெற்றார் என்றால் இல்லை. அழகுவின் வாரிசுகள் மின் இணைப்பு பெறுவதற்கு ஒப்புதல்கொடுத்தால் தான் இராசு மின் இணைப்பு பெற்றார் என்றால் சரியல்ல. ராசுவிற்கு மின் இணைப்பு வழங்க கூடாது என்று நான் ஆட்சேபணை எதுவும் தரவில்லை. இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.